# அகோரசிவாசாரியார் நோக்கில் அபரக்கிரியைகள் - மரபும் மாற்றமும்

தியாகராசா ஐயர் கிருஷ்ணமூர்த்தி ஐயர்

**ஆய்வுச் சுருக்கம்**

சைவசமயத்தில் கிரியைகள் இன்றியமையாத இடத்தினைப் பெற்று விளங்குகின்றன. அவை கோயிற் கிரியைகள், பூர்வக்கிரியைகள், அபரக்கிரியைகள் எனப் பல வகைப்படுவன. கிரியைகள் யாவும் ஞானம் கிடைத்தற்காகவே செய்யப்படுகின்றன என சைவசித்தாந்த நூல்கள் குறிப்பிடுகின்றன. விதிகளைப் பிரமாணமாகக்கொண்டு கிரியைகள் செய்யும் முறையினை முறையாகக் கூறும் நூல்களாகப் பதினெண் பத்ததிகள் விளங்குகின்றன. இதனடிப்படையில் இறந்தவருக்குச் செய்யப்படுகின்ற அபரக்கிரியைகளானவை இறந்த உயிருக்கு ஆன்ம ஈடேற்றத்தோடு ஞானத்தை உண்டாக்கி அவரின் ஆன்மிக விடுதலைக்காகச் செய்யப்படுகின்றன. இதற்கு அகோரசிவாச்சாரியார் தனது கிரியா கிரம யோதிகா பத்ததியில் அபரக்கிரியைகள் பற்றிப் பல விளக்கங்களைத் தெளிவாக விபரித்துள்ளார். பதினெண் பத்ததிகளுள் அகோரசிவாச்சாரியார் பத்ததியே உரை விளக்கத்துடன் ஆக்கப்பட்டதாகும். அபரக்கிரியைகள் சைவசித்தாந்தத் தெளிவோடு நடைபெறுகின்றன. அபரக்கிரியைகளுள் பேரிதாடனம், சூர்ணோற்சவம், அந்தியேட்டி, அஸ்திசஞ்சயனம், பாஷாணஸ்தாபனம், ஏகோதிட்டம், மாசிகம், சோதகும்ப சிரார்த்தம், சபிண்டீகரணம், சிரார்த்தம் போன்றவை அடிப்படையாக உள்ளன. அவற்றையே இன்றுவரை பெரும்பாலும் பின்பற்றப்படுகின்றன. ஆயினும் அவற்றுள்ளும் காலச் சூழமைவு, தேசவழமை, பொருளாதார வசதிப்பாடு, வேறுசில பத்ததிக்கலப்பு ஆகிய காரணிகளால் அபரக் கிரியைகள் செய்வதில் மாற்றங்கள் காணப்படுகின்றன. அவற்றை இக்கட்டுரை ஆராய்வதாக அமைகின்றது.

**திறவுச்சொற்கள் :** சைவசமயம், அபரக்கிரியை, அகோரசிவாசாரியார், பத்ததி, அந்தியேட்டி

**அறிமுகம்**

சைவசமயிகளின் வாழ்வியலில் கிரியைகள் இறப்பிற்கு முன்னும் பின்னும் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன. இறப்பிற்கு முன் செய்யப்படும் கிரியைகள் பூர்வக் கிரியைகள் என்றும் இறந்தபின் நிகழ்த்தப்படும் கிரியைகள் அபரக்கிரியைகள் என்றும் வழங்கப்படும். பதினெண் சிவாசாரியார்களினால் சிவாகம விதிகளைப் பிரமாணமாகக் கொண்டு கிரியைகள் செய்யும் முறையினை முறையாகக் கூறும் நூல்களாகப் பதினெண் பத்ததிகள் விளங்குகின்றன (கைலாசநாதக் குருக்கள், 1992:8). இப்பதினெண் பத்ததிகளுள் அகோரசிவாசாரியார் பத்ததியே சைவசித்தாந்தத் தெளிவோடு உரை விளக்கத்துடன் ஆக்கப்பட்டதாகும் (கந்தையா,1998:147). அகோரசிவாசாரியார் கி.பி பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பது அறிஞர்கள் கருத்தாகும் (சபாரத்தினம், 2002:98). அகோரசிவாசாரியாரால் ஆயிரத்தெண்பதாம் ஆண்டில் இயற்றப்பெற்றதே “கிரியா கிரம யோதிகா” ஆனது அவரது சுயவசனத்திற்கமையவே சைவசமயத்தவர் மத்தியில் அகோர

சிவாச்சாரியார் பத்ததி நீண்டகாலமாக நிலைத்து நிற்கிறது என அமைகிறது (நிர்மலமணி தேசிகர், 2008 : XIVII).

அபரக்கிரியைகள் ஒருவர் இறந்த பின்னர் அவரது ஆன்ம சாந்திக்காகவும், ஆன்ம ஈடேற்றத்திற்காகவும் அவரது பிள்ளைகளால் ஆகியோரால் செய்யப்படுகின்றன (கோபாலகிருஷ்ணஐயர், 1992: 133). அபரக்கிரியைகளானவை உத்தரக்கிரியை, சிரார்த்தக் கிரியை என இருவகையாக நடைபெறும். உத்தரக்கிரியைகளானது இறந்தவுடன் அவ்வவ் சந்தர்ப்பங்களில் இடம்பெறுவது. சிரார்த்தக்கிரியை ஒவ்வொரு வருடமும் இறந்த திதியிற் செய்யப்படுவதாகும். (மேலது) அபரக் கிரியைகளின் அடிப்படையான முறைகளைக் கூறும் புராதன நூலாக அகோரசிவாச்சாரியாரின் கிரியா கிரம யோதிகா என்னும் அகோர சிவாசாரியார் பத்ததி விளங்குகின்றது. அபரக்கிரியைகள் பற்றி அகோர சிவாசாரியார் குறிப்பிடும் கருத்துக்களின் அடிப்படையிலேயே சைவசமயிகளின் இறப்பின் பின் உள்ள கிரியைகள் நடைபெறுவது மரபாகக் காணப்படுகின்றது. ஆயினும் அவற்றுள்ளும் காலத்திற்கேற்ப சில மாற்றங்கள் காணப்படுகின்றன. இவற்றை ஆராய்ந்து வெளிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதாக இக்கட்டுரை அமைகின்றது.

**ஆய்வின் நோக்கம்**

இந்து மக்களின் வாழ்வியற் புலத்தில் பௌதிகவதீத நம்பிக்கைகளின் அடிப்படையில் நிகழ்த்தப்படும் கிரியைகளுள் ஆன்மா சார்ந்த முதன்மைக் கிரியையாக அபரக்கிரியை காணப்படுகின்றது. அந்த அபரக்கிரியை நிகழ்த்தப்படும் முறை, அவற்றின் பயன் என்பவற்றை அறிதல் இந்த ஆய்வின் நோக்கமாகும்.

**ஆய்வின் எல்லை**

அபரக்கிரியைகள் பல பத்ததிகள் காணப்படுகின்றபோதும் இலங்கையில் முதன்மைபெற்றுக்காணப்படும் அகோர சிவாசாரியாரின் பத்ததியை ஆய்வெல்லையாகக் கொண்டே இந்த ஆய்வு நிகழ்த்தப்படுகின்றது.

**ஆய்வுமுறையியல்**

இந்த ஆய்வில் விடயதானங்களை விளக்கி உரைக்க வேண்டியிருப்பதால் விளக்கமுறை முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. தேவையான இடங்களில் வரலாற்று முறை ஆய்வும் பகுப்பாய்வும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**அகோரசிவாசாரியார் பத்ததி**

ஆகம மரபு வடமொழியில் அமைந்திருந்ததனால் சமய, தத்துவப்பணி செய்த தமிழர்கள் பலரும் தமதாக்கங்களை வடமொழியிலேயே எழுதினர். அவர்களுள் சோழர்காலத்தில் வாழ்ந்த அகோர சிவாசாரியாரும் ஒருவர். வடமொழி ஆகமங்களும் அஷ்டப்பிரகண நூல்களுக்கும் பலவற்றுக்கு உரை செய்தவர். இவரது கருத்து நிலையை சிவஞான முனிவர் சிவசமவாதம் என்பார். அகோர சிவாசாரியாரிடம் ஆகமத்தின் சாரமாக செய்த பத்ததி 'அகோர சிவாச்சாரியார் பத்ததி' எனப்படுகிறது.

அபரக்கிரியை முறைமைகள் பற்றி அகோர சிவாசாரியார் தனது பத்ததியில் விரிவாகக் குறிப்பிடுகின்றார். அகோரசிவாசாரியார் பத்ததியே சிவாசாரியார்கட்கு மிகவும் சிறந்த கையேடாக விளங்குகின்றது. (சபாரத்தினம்,எஸ்.பி., 2002 : 97) சிவாகமங்கள் கூறும் கிரியை மரபுகளுக்கும் சைவ சித்தாந்தத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. சிவாகம மரபில் தோன்றிய அகோரசிவாசாரியார் பத்ததி அபரக்

கிரியைகளும் சைவசிந்தாந்த விளக்கமாக வே அமைகின்றன.

சிவாகம மரபுடன் பதிணென் சிவாசாரி யார்கள் இயற்றிய பதினெண் பத்ததிகளில் அகோரசிவாசாரியார் பத்ததியே சைவ சமயத்தவர் மத்தியில் அபரக்கிரியைகள் பயன்பாட்டுடனான நிலைப்பாடாகும். சமயதீட்சை பெற்றவரே சைவசமயி என்ற விதிக்கமையவே சைவசமயத்தில் அந்தி யேட்டியோடு கூடிய அபரக்கிரியைகள் எல்லாம் இறந்தவர் சிவத்துவமடைவதற்கு ஏதுவாயிருத்தல் என்பதற்கிணங்கவே அகோரசிவாசாரியார் பத்ததி அபரக் கிரியை மரபுகளுடனானதாகும். சமய தீட்சை பெற்றவர்க்கே அகோர சிவாசாரியார் பத்ததிவழி அந்தியேட்டியோடு கூடிய அபரக்கிரியைகள் யாவும் இடம் பெறலாம். 'இறுதி யாகம்' எனப்படும் ஆன்ம சுத்திக்கான அந்தியேட்டிக் கிரியை ஆற்றாது தொடர்ந்து அபரக்கிரியைகள் யாவும் இடம் பெறலாகாது (நிர்மலமணி தேசிகர், 2008 : IV). சமயதீட்சை பெறாதவர்க்கு தற்காலத்தில் தீட்சை பெற்று அகால மரணமடைந்தவர்களுக்கான துர்மரண பிராயச்சித்த விதி மரபுடனான அந்தி யேட்டியே நாள் மாற்றத்துடன் இடம் பெறுதலோடு அபரக்கிரியைகள் யாவும் ஆற்றப்படுகின்றன. பாஷாண ஸ்தாபனக் கிரியையானது எட்டுச்செலவு என சிவாகமம், பத்ததி ஆகியவற்றில் குறிப்படப்படாதவாறு மரபு மாற்றங்களுடன் தேசவழமையில் இடம்பெறுகின்றன (இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வெளியீடு, 2007 :9). தனிஷ்டா பஞ்சமி சாந்தியும் மாறு பட்டதாகும். துடக்குக்கழிவு நாட்களும் மாறு படுகின்றது. மூவகைத் தீட்சைக் கேற்பவே துடக்குக்கழிவு நாட்கள் மூன்றுவகை குறிப்பிடப்பட்டாலும் தீட்சை பெறாது சாதாரணமானவருக்கு முப்பத்தோராம் நாளில் கொள்ளப்படுகின்றது. (நிர்மலமணி தேசிகர், ஸ்ரீ., 2008 : 291). தீட்சை பெறாத வர்க்கு துடக்குக்கழிவு முப்பத்தோராம் நாளில் இடம்பெறும். அந்தியேட்டியானது அகோரசிவாசாரியார் பத்ததி வழி மாற்றத்துடன் சுப்பிரபேதம், விமலம் எனும் சிவாகமவழி இடம்பெறுதலாகும். (குமார சுவாமிக் குருக்கள், ச., 1959 : 7). ஆயினும் காரணம். காமிகம் போன்ற ஆகமங்கள் கிரியைகளை நிகழ்த்தும் முறையினை விதியுடன் விரிவாகக் கூறுவது போல் சுப்பிர பேதம், விமலம் அமைவது இல்லையென நூல்கள் கூறுகின்றன (கைலாசநாதக் குருக்கள், 1992 : 8).

ஒழுக்கமானது மனித வாழ்வின் உயர்வுக்கு அச்சாணியாக அமைந்துள்ளது என்பது சித்தாந்திகளால் எடுத்துணரப் பட்டுள்ளமையால் அதற்கு அழுத்தம் கொடுத்து விளக்கப்பட்டுள்ளமை அறிதற் குரியதாகும் (ஞானகுமாரன், 2012 : 156). இவ்வாறான மெய்கண்ட சாஸ்திரங்கள் முதலான பல சாத்திர, தோத்திர நூல்களின் செழுமையினால் சைவசித்தாந்த தத்துவ ரீதியிலும், சமய வாழ்வு நிலையிலும் சிறப் புறவே சிவாகம மரபுடன் அகோரசிவா சாரியார் பத்ததி அமைகின்றது.

### அபரக்கிரியைகள்

அபரக்கிரியைகளாவன பேரிதாடனம் (பேரிகையடித்தல்), சூர்ணோத்சவம் (சுண்ணமிடித்தல்), அந்தியேட்டி (இறுதி யாகம்), அஸ்திசஞ்சயனம் (எலும்புகளை எடுத்தல்), பாஷாணஸ்தாபனம் (ஆன்மா வைக் கல்லிலே பூசித்தல்), ஏகோதிட்டம், மாசிகம், சோதகும்ப சிரார்த்தம், சபிண்டீ கரணம் (பிண்டங்களை ஒன்று சேர்த்தல்), ஆப்திகம் (ஆண்டுத் திவசம்) சிராத்தம் (சிரத்தையுடனானது) எனப்பல கிரியைகள் உள்ளன. இறந்த ஒருவருக்கு வீட்டில்

நடைபெறும் கிரியைகளானவை பேரி தாடனம், சுண்ணமிடித்தல், நீராட்டல், மிருதஸ்னானம் (மஞ்சள் பொடிகள் சாத்துதல்) என்பன இடம்பெற்று மயானத் திற்குக் (சுடலை) பிரேத உடலைக் கொண்டு செல்வதாகும் (நிர்மலமணிதேசிகர், 2008: 5). தீட்சை பெற்று சாதாரண மரண மடைந்தவர்க்கே மயானத்தில் பிரேத உடலுடன் அந்தியேட்டி இடம்பெறல் எனவும் அகால மரணமடைந்தவராயின் ஆறாம் மாத நிறைவில் துர்மரணப் பிராயச் சித்த விதியுடனான அந்தியேட்டியே ஆற்ற லாம் எனவும் காமிகாகமத்தின் வழி அகோர சிவாச்சாரியார் பத்ததியில் இடம்பெறுகிறது. (நிர்மலமணிதேசிகர்,ஸ்ரீ., 2008 : 245).

## தீட்சையும் அந்தியேட்டியும்

தீட்சை பெற்றவர்க்கே மயானத்தில் மண்டபம் அமைத்து "இறுதியாகம்" எனப் படும் அந்தியேட்டியானது பிரேதவுடலுடன் இடம்பெற்று சிவாக்கினியால் தகனம் செய்து ஒரு வருடம் வரையான இறப்புத் திதியுடன் இடம்பெறும் சபிண்டீகரணம் வரையான அபரக்கிரியைகள் யாவும் ஆற்றுதற்குரியதாகும் (சிவபாதசுந்தரக் குருக்கள், 1986: 14). ஆயினும் தீட்சை பெற்று அகால மரணமடைந்தவராயின் இல்லத்தில் பேரிதாடனம், சூர்ணோத் சவத்துடன் நீராட்டி, மஞ்சட்பொடி சாத்தி பிரேதவுடலுடன் மயானத்தில் அந்தியேட்டிக் கிரியை இடம்பெறாது. மந்திரமின்றி மௌனமாக சிவாக்கினியால் தகனம் செய்தலாகும். பின்பு பன்னிரண்டு கற்களில் பதினொரு உருத்திரரையும் ஒரு பைரவரையும் பூசித்து அரிசி மாவினால் பலியிடுதலுடன் 'அகோராய நம' எனும் மந்திரத்தை ஒரு இலட்சம் தரம் செபம் பண்ணுதல் வேண்டும். அகால மரண மடைந்த ஆன்மாவிற்கு பிசாசத்துவ நிலை விடுபடுவதற்கானதே அரிசி மாவினால் உருத்திரபலியிடுதலாகும். வசதியீனம் காரணமாக தற்காலத்தில் அகோரமந்திரம் இடம்பெறாதது மாற்ற மாகும் (நிர்மலமணி தேசிகர், 2008: 243). இவ்வாறான தீட்சையுடன் அகால மரண மடைந்தவர்க்கான விதிமுறையானது தீட்சை பெறாதவர்க்குத் தற்காலத்தில் பிரேதவுடலுடன் மயானத்தில் இடம்பெறுதல் மிகப்பொருத்தமானதே ஆகும்.

தீட்சை பெற்று அகாலமரணமடைந்தவர்க்கு அந்தியேட்டி யாகமானது துர்மரணப் பிராயச்சித்த விதிக்கமைய கடற்கரை மண்டபத்தில் இடம்பெறும். அதாவது முப்பத்தாறு தர்ப்பைகளால் உருவாக்கப் பட்ட "புத்தளிகை" எனும் பிரதே உருவத் துடன் ஆறாம் மாத நிறைவில் இறப்புத் திதியுடனான நாளில் முப்பத்தாறு தத்துவத் துடன் மிருதக தீட்சையையும் கொடுத்து (நிர்மலமணிதேசிகர், 2008: 14). அந்தி யேட்டி நிறைவில் சிவாக்கினியால் புனர் தகனம் (மீள்தகனம்) செய்தலாகும். (நிர்மல மணிதேசிகர், 2008: 243). பின்பு எலும்புக்குப் பதிலாக தர்ப்பையுருவ சாம்பலினை நீரிலிடுதலாகும். இது அஸ்தி சஞ்சயனம் எனப்படும். இவ்வாறான துர்மரணப் பிராயச்சித்த விதியையே காலத்திற்கேற்ப தீட்சை பெறாது இயற்கை மரண மடைந்தவர்க்கு ஆறாம் மாதத்திற்கு முன்பு துடக்குக்கழியும் முப்பத்தோராம் நாளில் அந்தியேட்டி நிறைவுடன் சிவாக்கினியால் தர்ப்பையுடனான உருவத்தைத் தகனம் செய்தலுமாகும். தற்காலத்தில் இவற்றையே தர்ப்பை சுடுதல் எனப்படுகிறது. இது தீட்சை பெறாதவர்க்கான சுப்ரபேதம், விமலம் ஆகிய வேறுபட்ட சிவாகம வழியானது அகோரசிவாசாரியார் பத்ததியுடனான மாற்றமாகும். ஆயினும் சைவாசார மற்றவர்கள் இறந்தவழி சிவாக்கினியால் மந்திரமின்றி அவர் தேகத்தைத் தகனம்

செய்து துடக்குக்கழிவு முடிவுடனான முப்பத்தோராம் நாளில் அந்தியேட்டி செய்து ஒரு வருட முடிவுடனான சபிண்டீகரணம் வரையான கிரியை களையும் செய்தல் என சுப்ரபேதம், விமலம் ஆகிய சிவாகமங்கள் வழிமுறையாகும் (குமாரசுவாமிக் குருக்கள், 1959: 7).

**சபிண்டீகரணக் கிரியை**

சபிண்டீகரணக் கிரியையானது இறந்தவருடைய வருட முடிவுடனான இறப்புத் திதியுடன் இடம்பெறலாகும். ஏகோதிட்டம் முதல் பதினைந்து மாசிகம், சோதகும்ப சிரார்த்தம் என்பனவற்றைச் செய்த பின்பே சபிண்டீகரணம் இடம்பெறுதலாகும். ஏகோதிட்டம் துடக்குக்கழிவுடனான நாளில் இடம்பெறுதலாகும். சோதகும்ப சிரார்த்தமானது ஏகோதிட்டத் தினம் முதல் ஒருவருட முடிவுடனான சபிண்டீகரண தினம்வரை இடம்பெறுவதாகும். பதினைந்து மாசிகங்களில் பதினொன்றானவையே பதினொரு மாதா மாதம் வரையான இறப்புத் திதியுடனானதாகும்.

நான்கு மாசிகங்களானவை இறப்புத் தினத்திலிருந்து இருபத்தேழாம் நாளின் மேல் மூன்று தினங்களுக்கிடையிலும் நாற்பது முதல் நாற்பத்தைந்தாம் நாட்களுக்கிடையிலும், நூற்றெழுபது நாள் முதல் நூற்றெண்பதாம் நாட்களுக்கிடையிலும், முந்நூற்றைம்பதாம் நாள் முதல் முந்நூற்றறுபதாம் நாட்களுக்கிடையிலும் ஆகிய ஒவ்வொரு பிரிவிலும் ஒரு நாளில் இடம்பெறுபவையாகும். இம்முறையுடனான ஏகோதிட்டம் முதல் பதினைந்து மாசிகம் முடிவோடு பன்னிரண்டாம் மாத நிறைவுடனான இறப்புத் திதியுடன் சோதகும்ப சிரார்த்தத்தோடு சபிண்டீகரணம் நிறைவு பெறுவதாகும். ஆயினும் கர்த்தாவிற்கு தடங்கல், இடையூறுகள், வசதியீனங்களாகிய அசௌகரியங்கள் ஏற்படுமாயின் சக்திக்கியன்றவாறு செய்வதற்கு அகோரசிவாசாரியார் பத்ததியானது பிரசித்த விதியையும் கூறியுள்ளது. அதாவது துடக்குக்கழிவு முடிவுடனான நாளில் ஏகோதிட்டம் முதல், பதினைந்து மாசிகம் சோதகும்ப சிரார்த்தம் ஆகியவற்றுடன் சபிண்டீகரணத்தையும் நிறைவு செய்தலாகும் என்பதே அகோசிவாச்சாரியார் பத்ததி விதியாகிறது. தற்காலத்தில் இவ்வாறு இடம் பெறுவது மரபுடனானதேயன்றி மாற்றங்களல்ல என்பதே முடிவாகும் (நிர்மலமணிதேசிகர், 2008 : 305).

**தனிஷ்டா பஞ்சமி சாந்தி**

தனிஷ்டா பஞ்சமி சாந்தியானதும் மரபு மாற்றங்களுடன் இடம்பெறுகிறது. அவிட்டம் முதல் ரேவதி வரையான ஐந்து நட்சத்திரங்களில் இறந்தவர்களால் ஏற்படும் தோஷங்கள் நீக்குவதற்கானதே தனிஷ்டா பஞ்சமி சாந்தியாகும். அவிட்டம், சதயம். பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி என்னும் ஐந்து நட்சத்திரங்களில் மனிதன் மரணமடைந்தால் அந்தவீடு முழுமையாக நாசமடையும். இவற்றில் மாதா, பிதாக்கள் (தாய், தந்தை) இறந்தால் பின்பும் யாராவது இறப்பார்கள். இந்தத் தோஷங்களை நீக்குவதற்காகச் சாந்தி முறையும் தானமும் கூறப்படுகிறது. சகல சித்தியின் பொருட்டும், ஆயுள் விருத்தியின் பொருட்டும், ஐஸ்வரியம் உண்டாவதன் பொருட்டும் சாந்தி செய்யலாம். சுபநட்சத்திர சுப வாரங்களிலேயே சாந்தி செய்யலாம். (நிர்மலமணிதேசிகர், 2008: 231).

யமனை எருமை வாகனத்தில் இருப்பது போன்று வெள்ளைத்தட்டு ஒன்றில் படம் வரைந்து அதனை முறைப்படி பூசித்து தானம் செய்வது, வீட்டின் நடுவில் அலங்கரித்த இடத்தில் இலட்சுமி கும்பம் வைத்து இலட்சுமியைப் பூசித்து அக்கினி குண்டத்தில் ஓமம் செய்வது, நவக்கிரகங்

களையும் பூசித்து ஓமம் (ஆகுதி) செய்வது போன்றவற்றுடன் கர்த்தாவிற்கு நவக்கிரக செபம் செய்து பஞ்ச கௌபியம் பருகக் (ஊட்டக்) கொடுத்தலுடன் சிவாசாரியாருக் கும் தானம் கொடுத்து பூசை செய்தலாகிய யாவுமே தனிஷ்டா பஞ்சமி சாந்தி முறையாகும் (நிர்மலமணிதேசிகர், 2008: 233). ஆயினும் தோஷ நட்சத்திரங்களில் இறந்தவர் வீட்டில் பூரணகும்பம், தண்ணீர், பசு, தீபம் இவைகளை ஒவ்வொரு நாளும் வைத்து வளவு (காணி) முழுவதும் எள், நவதானியம், நெற்பொரி முதலியன தூவுதலுடன் நீத்துப் பூசணிக்காய் நேர்ந்து கட்டுவதும் பஞ்சமி தோஷ நிவர்த்திக்காக நூல் கட்டுவதும் தேசவழமையிலுள்ளன. மேலும் பிரேதத்தைச் சுடலைக்குக் கொண்டு செல்லும் போது கமுகம் பிள்ளை தாவரத்தையும் கொண்டு செல்லுமான வழக்கம் உண்டு (சிவபாதசுந்தரக் குருக்கள், 1986 : 56).

தனிஷ்டா பஞ்சமி சாந்தி ஆரம்பமானது யம தோஷம் நீங்குவதற்கானதாகும். ஆச்சாரியார் நித்திய கருமம் முடித்து, புண்ணிய வாசனம், பஞ்சகௌபியம் செய்து, புண்ணியாக நீர் தெளித்தலுடன் இடம் சுத்தி செய்து, விக்கினேஸ்வர பூஜையுடன் யம பிரதிதானம் செய்தலாகும். அதாவது வெள்ளித்தட்டில் எருமை வாகனத்துடன் யமனையும் வரைந்து எள்ளின் நடுவே வைத்து யமனை ஆவாகனம் (மனதினால் இருத்தல்) செய்து சிவப்பு சந்தனம், சிவப்பு பூக்களினால் சோடச பூசை செய்து பசு, தருணம், ஜலம் இவைகளை வைத்து நட்சத்திர தானம் செய்தலாகும். அவிட்ட நட்சத்திரத்திற்கு வெண்கலப் பாத்திரம், சதய நட்சத்திரத்திற்கு எள்ளு, பூரட்டாதி நட்சத்திரத்திற்கு வஸ்திரம் (ஆடை), உத்தரட்டாதி நட்சத்திரத் திற்கு வெல்லம், ரேவதி நட்சத்திரத்திற்கு வெள்ளியும் தானம் செய்தலாகும் (நிர்மலமணிதேசிகர், 2008: 243).

நட்சத்திரத்தைத் தொடர்ந்து வீட்டின் நடுவில் இரண்டுபடி (கொத்து) நெல்பரவி ஒருபடி அரிசியும், அரைப்படி எள்ளும், காற்படி உழுந்தும் பரவி, எட்டிதழ் தாமரைப் பூவையும் வரைந்து, அதன்மேல் கும்பம் வைத்து, இலட்சுமியை ஆவாகனம் (இருத்தி) செய்து குங்குமம், சந்தனம், வஸ் திரங்களால் அலங்கரித்து இலட்சுமியைக் கும்பத்தில் பூசித்து சுற்றிவர கிழக்கு முதல் ஈசானம் (வடகிழக்கு) வரையான எட்டுத் திக்குப் பாலகர்களையும் (பாதுகாப்ப வர்கள்) கலசங்களில் பூசித்து யாவற்றுக்கும் நைவேத்திய தூப, தீபம் காட்டப்படும். மேலும் அஷ்டதிக்குப் பாலகர் (எட்டுத் திக்கு), இலட்சுமி ஆகிய அவரவர் மந்திரங்களை நூற்றெட்டுத் தடவையாவது செபித்து கும்பத்திற்கு மேற்குத் திசையில் அக்கினியைக் குண்டத்தில் உண்டாக்கி குண்டத்தின் நடுவே இலட்சுமியை ஆவாகித்து பூசித்து இலட்சுமியின் மந்திரத் துடன் நெய்யினால் நூற்றெட்டு ஓமமும் செய்தலாகும்.

பின்பு எட்டுத்திக்குப் பாலகர்களுக்கும் அவரவர் மந்திரங்களால் நூறு, நூறு தடவை ஓமம் செய்தலாகும். எட்டுத்திக்குப் பாலகர் களுக்கான ஓமத்திரவியங்களானவை இந்திரனுக்குச் சிவப்பு நிறமுள், அக்கினிக்கு எருக்கு, யமனுக்கு எள்ளு, நிருத்திக்கு அத்தி, வருணனுக்கு களுசி, வாயுவிற்கு பலாசு, ஈசானனுக்கு வில்வம் போன்றவையாகும். மேலும் அக்கினி குண்டத்திலே நவக்கிரகங்களுக்கான திரவியங்களால் ஓமம் செய்தலாகும். சூரியனுக்கு எருக்கு, செவ்வாய்க்கு கருங்காலி, சுக்கிரனுக்கு (வெள்ளி) அத்தி, சந்திரனுக்கு முருக்கு, புதனுக்கு நாயுருவி, குருவிற்கு (வியாழன்) அரசு, சனிக்கு வன்னி,

ராகுவிற்கு அறுகு, கேதுவிற்குத் தர்ப்பை என்பனவே நவக்கிரக ஆகுதிச் சமித்துக் களாகும். பின்பு கர்த்தாவைக் கிழக்கு முகமாக உட்காரச் செய்து கும்ப நீரால் (ஜலத்தால்) நீராட்டி பஞ்சகௌபியம் குடிக்கச் செய்து நெய்யைப் பார்த்த வண்ணம் ஆச்சாரியாருக்குத் தானங்கள் வழங்கி பூஜையும் செய்தலாகும். இவ்வாறான தனிஷ்டா பஞ்சமி சாந்தி முறையானது அகோரசிவாசாரியார் க்ரியாக்ரம ஜ்கோதி அபரக்கிரியாவிதி வியாக்கியானத்தில் கூறப்பட்டவையாகும். (நிர்மலமணிதேசிகர், 2008: 234). ஆயினும் தனிஷ்டா பஞ்சமி சாந்தியானது அகோர சிவாசாரியார் பத்ததி வழி மரபு மாற்றங்களுடன் தற்காலத்தில் இடம்பெறுகின்றன.

விக்னேஸ்வரர் பூசை புண்ணியாக வாசனம், பஞ்சகௌபியம் பூஜை முடித்து சுளகில் அரிசிமா, மஞ்சள்மா, கரிமா, பச்சைமா (இலையுடனானது), சிவப்பு மா (செங்கல்) இவற்றால் சிதாஸ்தான பதம் வரைந்து இதில் பஞ்ச தத்துவங்களையும் பூசிப் பார்கள். பின்பு அரிசிமா அல்லது தர்ப்பை யினால் செய்த புத்தளிகையை (பிரேத உருவம்) வைத்து அந்த நட்சத்திரத்திற்குரிய மந்திரங்களால் பூசித்து அக்கினி உண்டாக்கி ஓமம், பலி, பூர்ணாகுதி கொடுத்து நிறைவு செய்கிறார்கள். தொடர்ந்து சுளகுடனான தர்ப்பை உருவத்தைச் சுடலைக்குக் கொண்டு சென்று தகனம் செய்து சாம்பலை நீர்நிலையில் கரைத்து வீட்டிற்கு வந்து நீராடி அநுட்டானம் முடிக்கிறார்கள். பின்பு சிவன், வர்த்தனி (அம்பிகை) இலட்சுமி நவக்கிரக தேவர்களையும் பூசித்து கர்த்தாவிற்குச் சிவன், வர்த்தனி கும்ப நீரால் அபிஷேகம் செய்கிறார்கள். அதன்பின் தானம் கொடுக்கிறார்கள். (நவநீதகுமார், 2008 : 10).

**பாஷாணஸ்தாபனம்**

சிவாகம மரபுடனான பாஷாணஸ்தாபனம் எனும் கிரியையானது சிவாகமம், பத்ததி ஆகியவற்றில் குறிப்பிடப்படாதவாறு "எட்டுச்செலவு" கிரியை என தேச வழமை யில் காலமாற்றத்துடன் இடம் பெறுகின்றது. (ஆத்மவிமோசனம் (அபரக் கிரியை), இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக் களம் வெளியீடு, கொழும்பு, 2007: 9). இறந்த வருடைய ஆன்மாவைக் கல்லிலே பூசித்தல் என்பதே பாஷாணஸ்தாபனமாகும். உடல் பிரிந்த ஆன்மாவானது உடலற்றவாறு பசி, தாகங்களுடன் அலைவதாகும்.

இறந்த ஆன்மாவின் உடலற்ற (தேகமற்ற) பயணத்தின் போது ஏற்படும் பசி, தாகங்களால் உண்டாகும் அதிகமான துக்கத்தை நீக்குதலே, இறந்தநாள் முதல் துடக்கு முடிவு நாள் வரை தினமும் பிண்டமிட்டு தர்ப்பணம், தானங்கள், நைவேத்தியம் ஆகியவை செய்தலாகும். தாயின் கருப்பையில் கருப்பந்தரித்த ஆன்மாவுடனான குழந்தையின் தேக வளர்ச்சியைப் போன்று செங்கல்லில் மனதால் அமர்த்தியவாறான இறந்த உடல் பிரிந்த ஆன்மாவிற்கு பிண்டங்கள் இடுவதால் தேக வளர்ச்சியும், எள், நீருடனான தர்ப்பணங்களால் தாகங்களும் உணவு நைவேத்தியத்துடன் தானங் களாலும் பசியும் நீங்குதலாகும். தாயின் கருப்பையில் கருப்பந்தரித்த ஆன்மா வுடனான குழந்தை யானது தாய் வயிற்றின் இரைப்பையில் சமித்த உணவை கருவூண் குழாய் இணைப்பு மூலம் தொப்புள் வழியாகப் பெறுவதோடான தேக வளர்ச்சி யைப் போன்று, கருங்கல்லில் உடல் பிரிந்த ஆன்மாவை மனதால் ஆவாகித்து அமர்த்தியவாறு பிண்டங்கள் இடுவதால் தேகவளர்ச்சியும், நீர், எள்ளுடனான தர்ப் பணம் செய்வதால் தாகங்களும் உணவு

மூலம் நைவேத்தியம் செய்வதால் பசியும் நீங்குதல் என்பதே பாஷாணஸ் தாபன மாகும் (வேங்கடவன், 2003 : 26).

வீட்டில் வடக்கு முகமாக மண்பானையால் கும்பம் வைத்து அலங்கரித்து தர்ப்பை யுடனான கூர்ச்சமும் இடுதலாகும். அதற்கு முன்பு முக்கோண வடிவில் நிலத்தில் குழி அமைத்து அதன்மேல் மடக்கை அல்லது மண்சட்டியை வைத்தலாகும். மண்சட்டியில் செங்கல்லை வைத்து இறந்த ஆன்மாவை ஆவாகித்து (மனதால் அமர்த்தி) இறந்தநாள் முதல் துடக்கு முடிவு நாள் வரை பூசை செய்து தர்ப்பணமும், நைவேத்திய தானங்களும் இடம்பெறும். அதாவது இறந்த நாளில் மூன்று பிண்டங்களுடன் மூன்று தர்ப்பணமும், மறுநாள் நான்கு பிண்டங் களுடன் நான்கு தர்ப்பணமும் என்றவாறு தினமும் ஒவ்வொரு பிண்டங்களை அதிகரித்தவாறு துடக்குமுடிவு நாள்வரை தர்ப்பணமும் செய்தலாகும். துடக்கு முடிவு நாளில் இறந்தவர் விரும்பியுண்ட பேருணவைப் படைத்து பூஜை, தர்ப்பணம், நைவேத்தியம் செய்து கும்பம், செங்கல் ஆகியவற்றைப் புண்ணிய தீர்த்தத்திற்குக் கொண்டு சென்று இடுதலாகும். இது பாஷாண உத்தாபனம் (கல்லை எடுத்தல்) எனப்படும். அதாவது கும்பம், செங்கல் ஆகியவற்றைப் பீடத்துடன் எடுத்து அழகான பல்லக்கில் வைத்து வஸ்திரத்தால் (ஆடையால்) மூடி தூப, தீபம் காட்டி சர்வ வாத்தியங்களுடன் புண்ணிய தீர்த்தத் திற்குக் கொண்டு சென்று இடுதலாகும். (நிர்மலமணிதேசிகர்,ஸ்ரீ., 2008 : 257 - 261).

அகோரசிவாச்சாரியார் பத்ததியுடனான பாஷாணஸ்தாபனம் எனும் கிரியையானதே எட்டுச்செலவு என மரபுமாற்றத்துடனும் கால மாற்றத்துடனும் இடம் பெறுகின்றன. இறந்த நாளிலிருந்து ஏழாம் நாளில் மட்டும் செய்யப்படுகிறது. ஆயினும் தேவை கருதி ஐந்தாம் நாளிலும் செய்யப்படுவதுண்டு. இறந்தவர் விரும்பியுண்ட உணவு வகை யாவும் பேருணவாகப் படைத்து தூப, தீபம் காட்டி அவ்வுணவு வகைகளில் சிறுபகுதி யைத் தீப்பந்தம், இளநீருடன் சந்தியில் வைக்கும் வளக்கம் உண்டு. மாமிச உணவு, மதுபானம் படைத்தலும் உண்டு. (ஆத்ம விமோசனம், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீடு, 2007 : 9).

**முடிவுரை**

ஆன்மா கடவுளை அடைதலே பிறப்பின் நோக்கம். இந்த நோக்கத்தை அடையக் கூடிய வழியைத் தன்னகத்தே கொண்டுள்ள சமயமே சைவசமயம். இந்நோக்கத்தை யடைவதற்கு இன்றியமையாததாகிய இறைவன் திருவருளைப்பெற உதவும் சாதனமாக ஆகமங்கள் கொள்ளப்படு கின்றன. கடவுள், ஆன்மாக்கள், கடவுள் வழிபாடு, நல்வினை, தீவினைகள், சைவ வாழ்க்கை, சைவ ஒழுக்கம், சைவத்தின் மேன்மை, சைவசித்தாந்த அடிப்படை ஆகியவை பற்றிய கருத்துக்களைச் சாஸ்திர ரீதியில் உணர்த்தும் ஆகம மரபுடனானதே அகோரசிவாசாரியார் நோக்கில் அபரக் கிரியை பத்ததி வழியுமாகிறது (ஆறுமுக நாவலர்,1956:3-4). இவ்வாறாக அகோர சிவாசாரியாரின் பத்ததியில் குறிப் பிட்டவாறே அபரக் கிரியைகள் தொன்று தொட்டு நிகழ்த்தப்பட்டு வருகின்றன என்பது தெளிவாகின்றது. இருப்பினும் அகோரசிவாசாரியார் கூறும் அபரக் கிரியை முறைகள் தற்காலச் சூழ்நிலையில் தேச வழமைக்கேற்பவும், காலநிலைக்குரிய வாறும் சில மாற்றத்துடன் இடம் பெறுவது குறிப்பிடப்பாலதாகும்.

**உசாத்துணைகள்**


ஆறுமுகநாவலர். (1956). *சைவதூஷண பரிகாரம்,* யாழ்ப்பாணம்: சைவபரிபாலன சபை.

*ஆத்மவிமோசனம் (அபரக்கிரியை).* (2007). கொழும்பு: இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

கந்தையா, மு. (1998). *சைவ சித்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிருதி.* யாழ்ப்பாணம்: பல்கலைக் கழக வெளியீடு.

குமாரசுவாமிக் குருக்கள், ச. (1959). *சிரார்த்த தீபிகை.* பருத்தித்துறை: கலாநிதி யந்திரசாலை .

கைலாசநாதக் குருக்கள், கா. (1992). *சைவத்திருக்கோவிற் கிரியைநெறி.* கொழும்பு: கொழும்பு இந்துகலா அபிவிருத்திச்சங்கம்.

கோபாலகிருஷ்ண ஐயர், ப. (1992). *இந்துப் பண்பாட்டு மரபுகள்.* யாழ்ப்பாணம்: வித்தியா வெளியீடு.

சபாரத்தினம், எஸ். பி. (2002). *சைவ ஆகமங்கள் ஓர் அறிமுகம்.* சென்னை: கழக வெளியீடு.

சிவபாதசுந்தரக் குருக்கள், க. (1986). *அபரக்கிரியை விளக்கம்.* தெல்லிப்பளை: அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபை வெளியீடு.

ஞானகுமாரன், நா. (2012). *சைவசிந்தாந்தத் தெளிவு.* திருநெல்வேலி: தூண்டி.

நவநீதகுமார், செ. (2008). *அந்திமக் கிரியையும் ஆசௌச விளக்கமும்.* கொழும்பு: சைவநீதி வெளியீட்டுக்குழு.

நிர்மலமணிதேசிகர், ஸ்ரீ. (2008). *ப்ரபா வியாக்கியானத்துடன் க்ரியா க்ரம த்யோதிகா எனும் ஸ்ரீமத் - அகோர சிவாச்சாரியார் பத்ததி, முதலாம் பாகம்.* பிள்ளையார்பட்டி: சிவநெறிக் கழக வெளியீடு,

நிர்மலமணிதேசிகர், ஸ்ரீ. (2008). *ப்ரபா வியாக்கியானத்துடன் க்ரியா க்ரம த்யோதிகா எனும் ஸ்ரீமத் - அகோர சிவாச்சாரியார் பத்ததி, மூன்றாம் பாகம்,* பிள்ளையார்பட்டி: சிவ நெறிக்கழக வெளியீடு.

## The Researchers' Profile

| Name | Designation | Institutional Affiliation |
|---|---|---|
| திருமதி பிறேமலதா அமலதாஸ் | ஆசிரியர் | மு/கலைமகள் வித்தியாலயம், முல்லைத்தீவு. |
| தயாளினி அம்பிகைபாலன் | ஆசிரியர் | கொ/ஹமீத் அல் ஹசைனி கல்லூரி. கொழும்பு -12 |
| ஆனந்தமயில் நித்திலவர்ணன் | சிரேஷ்ட விரிவுரையாளர் | கல்வியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். |
| திருமதி. சீதாலஷ்மி பிரபாகரன் | கலாநிதிப்பட்ட ஆய்வாளர் | உயர்பட்டப்படிப்புக்கள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் |
| கலாநிதி.ஏ.என்.கிருஷ்ணவேணி | ஓய்வுநிலைப் பேராசிரியர் | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் |
| கலாநிதி எம்.ஏ. நு:மான் | ஓய்வுநிலைப் பேராசிரியர் | பேராதனைப் பல்கலைக்கழகம் |
| தியாகராசா ஐயர் கிருஷ்ணமூர்த்தி ஐயர் | முதுமெய்யியல் மாணி ஆய்வாளர் | உயர்பட்டப்படிப்புக்கள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் |
| யஸ்மியா குகதாசன் | விரிவுரையாளர் | அரசறிவில்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் |
| சுபோதினி ரமேஸ் | பேராசிரியர் | மொழியியல் மற்றும் ஆங்கிலத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் |

## The Reviewer's Profile

| Name | Designation | Institutional Affiliation |
|---|---|---|
| Dr. (Mrs). S.Srimuralitharan | Head | Department of Hindu Civilization Faculty of Hindu Studies University of Jaffna |
| Prof. P. Kopalakrishna Iyar | Professor Emeritus in Sanskrit | Faculty of Hindu Studies University of Jaffna |
| Dr. P. Chandrasegaram | Head | Department of Saiva Sinddhantha Faculty of Hindu Studies University of Jaffna |
| Dr. T. Selvamanoharan | Senior Lecturer | Department of Saiva Sinddhantha Faculty of Hindu Studies University of Jaffna |
| Prof. A.Sanmugadas | Professor | Emeritus in Tamil Faculty of Arts University of Jaffna |
| Dr. Mohana Dass A/L Ramasamy | Professor | Department of Indian Studies Faculty of Arts and Social Sciences University of Malaya Malaysia |
| Prof F.M.Nawastheen | Professor | Department of Secondary & Tertiary Education, Faculty of Education, The Open University of Sri Lanka, Nawala, Nugegoda |
| Dr.N.Pushparajah | Senior Lecturer | Department of Social Sciences, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka, Chenkalady |

| Name | Designation | Institutional Affiliation |
|---|---|---|
| Prof. MAM. Fowsar | Professor | Department of Political Science Faculty of Arts and Culture South Eastern University of Sri Lanka University Oluvil |
| Prof. Subathini Ramesh | Professor | Department of Linguistics and English Faculty of Arts University of Jaffna Sri Lanka |
| Dr .J.D. Careemdeen | Senior Lecturer Gr 1 | Faculty of Education, The Open University of Sri Lanka Nawala, Nugegoda |